©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 20.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 9, 2020
ஆவணி 24, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (M2) துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் : 106, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2) த்துறை, 25 ஜீன் 2020]*

1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 49 மற்றும் 112-ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1953-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (நல அலுவலர்கள்) விதிகளில் செய்யக்கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தம், மேற்சொன்ன சட்டத்தின் 115-ஆம் பிரிவின் உட்பிரிவு (1) இல் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த **அறிவிக்கை,** *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்தப் பின்னர், இந்த வரைவுத் திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை, 'புதிய எண்.47/1, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600 032' - இல் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,-

விதி (4) – இல்,

(a) பகுதி (a) – இல், உட்பகுதி (ii) - இல் "வர்த்தகம் (பணியாளர் மேலாண்மை மற்றும் தொழிலக உறவுகள்) அல்லது", என்ற சொற்றொடருக்குப் பின்னர், "மனித வள மேலாண்மை அல்லது நிகரான அல்லது" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) பகுதி (c)க்குப் பதிலாக, பின் வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன :-

"(c) தமிழ் மொழி பற்றிய போதிய அறிவு:"

(c) இரண்டாவது வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்புநிபந்தனை சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:

"அனால், தொழிலகத்தில் நியமிக்கப்பட்ட நல அலுவலர், அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு ஆண்டிற்குள் தொழிலகத்தில் பெரும்பாலான தொழிலாளர்களால் பேசப்படும் மொழி பற்றிய போதிய அறிவு பெற்றுள்ளதை தொழிலக விவகாரங்களுக்கு பொறுப்பு வகிப்பவர் உறுதி செய்ய வேண்டும்."

(2) விதி 5 -இல், துணை விதி (1) இல்:-

(a) "மாநிலத்தில் பெருமளவில் விற்பனையாகின்ற இரண்டு செய்தித்தாள்களில் அதாவது ஒன்று தமிழிலும் மற்றொன்று ஆங்கிலத்திலும் காலிப்பணியிடம் குறித்து விளம்பரம் செய்யப்படும்", என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மாநிலத்தில் பெருமளவில் விற்பனையாகின்ற செய்தித்தாள்களில் அதாவது ஒன்று தமிழிலும் மற்றொன்று ஆங்கிலத்திலும் அல்லது ஒரு முக்கியமான இணையதள வேலைவாய்ப்பு வலைதளத்திலும் காலிப்பணியிடம் விளம்பரப்படுத்தப்படும்;" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(b) முதலாவது வரம்புநிபந்தனைக்குப் பதிலாக, பின்வரும் வரம்புநிபந்தனை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;, அதாவது:

'ஆனால் அரசு நிறுவனம், அரசு சார் நிறுவனம், பொதுத்துறை நிறுவனம் அல்லது அரசின் நிதியுதவி பெறும் தனியார் நிறுவனத்தில் உள்ள காலியிடங்கள், இந்த துணை விதியில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான காலிப்பணியிடங்களை விளம்பரப்படுத்துவதன் வாயிலாக தகுதிவாய்ந்த அனைத்து நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதுடன் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்தும் தகுதிவாய்ந்த நபர்களின் பெயர்களை கோரிப்பெறுவதன் மூலம் நிரப்பப்பட வேண்டும் ";

(3) பிற்சேர்க்கையில், நெடும்பத்தி (1) — இல் உள்ள "62" என்ற பதிவு மற்றும் அதனுடன் தொடர்பான (2) மற்றும் (3) நெடும்பத்திகளின் நிகரான பதிவுகளுக்குப் பின்னர், பின்வரும் பதிவுகள் முறையே சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:-

| | | |
|---|---|---|
| "63 | நிருவாகச் சட்டத்துடன் தொழிலாளர் சட்டங்களில் முதுகலை பட்டயப் படிப்பு (வார இறுதி) | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை." |

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்*

//தமிழாக்கம்//

ந. அருள்,
இயக்குநர்
*தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்*
*(மொழிப்பெயர்ப்பு) துறை*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1) த்துறை**

*[அரசாணை (நிலை) எண்:111, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 14 ஜீலை 2020]*

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட சில தொழிலாளர் தொடர்பான சட்டங்களின் தேவைகளை நம்பிக்கை அடிப்படையிலான திறன்மிகு பொது சேவையை வழங்கும் வகையில் படிவங்கள் மற்றும் அறிக்கைகளை எளிமையாக்கும் நோக்கத்திற்காக இணக்கமானவற்றை எளிதாக்குவதற்காகவும் விரைவுபடுத்துவதற்காகவும் தனிப்பட்ட விதிகளை ஏற்படுத்துவது அவசியமாகிறதென்பதாலும்;

மேற்சொன்ன தொழிலாளர் தொடர்பான சட்டங்கள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளை மின்னணு வடிவில் அல்லது ஏனைய வகையில் பயன்படுத்தும் நோக்கங்களுக்காக, ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் அறிக்கைகளை வழங்கும் குறிக்கோளுடன் அத்தகைய படிவங்கள் மற்றும் அறிக்கைகளை பயன்படுத்துவதற்காக அதில் விதித்துறைகள் ஏறபடுத்தப்பட்டுள்ளதாலும்

இந்த விதிகளின் கீழ் வகை செய்யப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் சீரமைக்கப்பட்ட படிவங்களும் அறிக்கைகளும் விதிகளுக்கு இணக்கமாதலையும் ஆய்வினை எளிதாக்கி, அதன் கீழ் வழங்கப்பட்டுள்ள தகவல்களை பொதுமக்கள் எளிதாக பெற்று இதனால் வெளிப்படைத்தன்மை பெருகும் என்பதாலும்

பொதுச்சேவையளிக்கும் நோக்கத்தில் சிறப்பாக பயன்படுத்தப்படுகிற தொழிலாளர் தொடர்பான சட்டங்களின் கீழ் வழங்கப்படுகிற படிவங்கள் மற்றும் அறிக்கைகளை வழங்குவதில் மேலே குறிப்பிட்ட நோக்கங்களுக்காக இயற்றப்படுகிற தனிப்பட்ட விதிகள் சிறந்த பயன் தரும் என்பதாலும்,

மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு, பின்வருவனவற்றில் அதாவது

(a) 1970-ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் சட்டத்தின் (மத்திய சட்டம் 37/1970) 35-ஆவது பிரிவு;

(b) தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும் சட்டத்தின் (மத்திய சட்டம் 30/1979) 35-ஆவது பிரிவு;

(c) தமிழ்நாடு 1996-ஆம் ஆண்டு கட்டட மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1996) 62-ஆவது பிரிவு ஆகியவற்றில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வல்லுநர் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்ட விதிகளின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைக்க கருதுவதாலும்;

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம். —

(1) இந்த விதிகள் "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகள்" என அழைக்கப்படும்.

(2) இவை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. குறிப்பிட்ட சில தொழிலாளர் தொடர்பான சட்டங்களின் கீழ் படிவங்களை வைத்துவருதல்.-

(1) பின்வருவனவற்றின் கீழ் இயற்றப்பட்ட யாதொரு விதிகளில் என்ன சொல்லியிருப்பினும் இந்த விதிகளுடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட படிவங்கள் மின்னணு முறையில் அல்லது வேறு ஏதேனும் வகையில் வைத்து வரப்பட வேண்டும். மேற்சொன்ன சட்டங்கள் மற்றும் அதன் கீழ் இயற்றப்படும் விதிகளின் நோக்கங்களுக்காக அதில் குறிப்பிட்டவாறு பயன்படுத்தப்பட வேண்டும். அவையாவன;

*i.* 1970-ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டம் (மத்தியச் சட்டம் 37/1970)

*ii.* 1979-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்)சட்டம் (மத்தியச் சட்டம்30/1979); மற்றும்

*iii.* 1996-ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும் சட்டம் (மத்திய சட்டம் 27/1996)

(2) மேற்சொன்ன துணை விதியில் குறிப்பிட்டவாறு யாதொரு சட்டங்களின் கீழ் நியமிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட ஆய்வாளரால் ஆய்வுக்காக (1)-ஆம் துணை விதியில் பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் தேவைப்படுமாயின் சம்பந்தப்பட்ட நபர்கள் நேர்விற்கேற்ப அத்தகைய படிவங்களை வைத்திருக்க வேண்டும் அல்லது தகவல்களை மதிப்பிடும் நோக்கங்களுக்காக அவசியமான விவரங்களை அளிக்க வேண்டும்.

3. **குறிப்பிட்ட விதிகளில் திருத்தம்.-** கீழே குறிப்பிட்ட முறையில், அத்தகைய திருத்தங்களுக்கு முன்னர், சொல்லப்பட்ட விதங்களில் உள்ளவாறு செயல்கள் மேற்கொள்ளப்பட்டால் அல்லது நீக்கம் செய்யப்பட்டால் தவிர பின்வரும் விதிகள் திருத்தப்படவேண்டும் , அதாவது :

**(1) தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்) விதிகளில்,**

(a) விதி 17-இன், துணை விதி (1A)-இல் "படிவம் 1-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, " தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் XII-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) விதி 18-இன், துணை விதி (1) இல்-"படிவம் II-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் 1-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(c) விதி 21-இல்,

*i.* துணை விதி (1)-இல் "படிவம் IV-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் முறைப்படுத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் II-இல்" என்ற சொற்றொடர் சேர்க்கப்பட வேண்டும்;

*ii.* துணை விதி (2)-இல் "படிவம் V-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் III-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(d) விதி 24-இன், துணை விதி (2)-இல் "படிவம் V-A-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் V - இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(e) விதி 25-இல்

*i.* துணை விதி (1)-இல் "படிவம் VI-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு-2020 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் VI-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

*ii.* துணை விதி (2)-இல்

A. பகுதி (iv)-இல் “தீர்வு அல்லது தீர்வளிப்பு” என்ற சொற்றொடருக்குப் பின்னர், “அல்லது உரிய அரசால்” என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

B. பகுதி (vii)-இல் "படிவம் VI-A-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு-2020 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் VII-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(f) விதி 29-இன், துணை விதி (2)-இல் "படிவம்-VII-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம்-II-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(g) விதி 32 நீக்கப்பட வேண்டும்

(h) விதி (77)-இல் "படிவம்-XV இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் VIII-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(i) விதி (81)-இன், துணை விதி (3)-இல் "படிவம் VI-B-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் VII-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(j) தற்போதுள்ள I, II, IV, IV, V, V-A. VI, VI-A, VI-B, VII, VIII, IX, X, XI, மற்றும் XV என்ற படிவங்கள் விட்டுவிடப்பட வேண்டும்.

(2) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகளில்,-

(a) 3-ஆம் விதியின், துணை விதி (1)-இல் “படிவம் I-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் XII-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) 4 விதியின், துணை விதி (1)-இல் உள்ள “படிவம் II-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “தமிழ்நாடு 2020 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் I-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(c) 7-ஆம் விதியில்,-

*(i)* துணை விதி (1)-இல், “படிவம் IV-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “தமிழ்நாடு 2020 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் II-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

*(ii)* துணை விதி (2)-இல் “படிவம் V-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “தமிழ்நாடு 2020 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் II-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

*(iii)* துணை விதி (3)-இல், பகுதி (a)-இல் உள்ள “படிவம் VI-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் III-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(d) 10-ஆம் விதியின், துணைவிதி (2)-இல் “படிவம் VII-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் V-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(e) 11-ஆம் விதியில்,-

*(i)* துணைவிதி (1)-இல் “படிவம் VIII-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் VI-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

*(ii)* துணைவிதி (2)-இன், பகுதி V-இல் “தீர்வு அல்லது தீர்வளிப்பு ” என்ற சொற்றொடருக்குப் பின்னர் “அல்லது உரிய அரசால்” என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(f) 15-ஆம் விதியின், துணைவிதி (2)-இல் “படிவம் IX-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் II-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(g) 21-ஆம் விதியின் ,துணைவிதி (1)-இல் “படிவம் X-இல்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக “தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் X-இல்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(h) 24-ஆம் விதியில்"படிவம் XI-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் X-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(i) 50-ஆம் விதியில் "படிவம் XIV-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் VIII-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்: மற்றும்

(j) தற்போதுள்ள படிவங்கள் I ,II, IV ,V,VI, VII, VIII, IX, X, XI மற்றும் படிவம் XIV ஆகியவை விட்டுவிடப்பட வேண்டும்.

**(3) தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டடங்கள் மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்களுக்கான (பணி முறைப்படுத்துதல்மற்றும் பணி நிலைமைகள்) விதிகளில்,-**

(a) 23-ஆம் விதியின், துணைவிதி (1)-இல் "படிவம்-I-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் XII-இல் " என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) 24-ஆம் விதியின், துணைவிதி (1)-இல் "இந்த விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் II-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் I-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(C) 26-ஆம் விதியின், துணைவிதி (3)-இல் " இந்த விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் IV - இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் VII-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(d) 74-ஆம் விதியில் துணை விதி (b)-இல்,-

*(i)* (i)-ஆம் பகுதியில் ,-

(A) உட்பகுதி (a)-இல் உள்ள "இந்த விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் V-இல் " என்ற சொற்றொடருக்குப் பதிலாக " தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் IV-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(B) உட்பகுதி (b)-இல் "இந்த விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் VI-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக " தமிழ்நாடு 2020 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் IV-இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

*(ii)* பகுதி (ii) உள்ள "இந்த விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் VII-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக " தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் IV இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

*(iii)* பகுதி (iii)-இல் உள்ள "இந்த விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் VIII-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் IV - இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

*(iv)* பகுதி (iv)-இல் , "இவ்விதிகளின் அட்டவணை XIII இன் கீழ் உள்ள படிவம் IX-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் IV - இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(e) விதி 210-இன், துணை விதி (7)-இல் "படிவம் XIV-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் விதிகளின் கீழ், படிவம் XI-இல் இணைக்கப்பட்ட முறைப்படுத்தலுக்கான படிவங்கள் மற்றும் அறிக்கைகள் " என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(f) விதி 223-இன், பகுதி (c)-இல் "இவ்விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் XI-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் IX- இல்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(g) விதி 230-இல் பகுதி (a)-இல் "இவ்விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் XIII-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் XI-இல் " என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(h) விதி 239-இன் துணை விதி (I)-இல், "இவ்விதிகளின் அட்டவணை XIII-இன் கீழ் உள்ள படிவம் IV-இல்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் VII-இல் " என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(i) விதி 241-இன் துணை விதி (2)-இல், பகுதி(b)-இல் "இவ்விதிகளின் அட்டவணை XIII இன் கீழ், படிவம் XXIV-இல்" என்ற தொடருக்கு பதிலாக, "தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டங்களின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளுடன் இணைக்கப்பட்ட படிவம் VIII-இல் " என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்; மற்றும்

(j) தற்போதுள்ள I, II, IV, V, VI,VII, VIII, IX, X, XI, XIII, XIV மற்றும் XXIV ஆகிய படிவங்கள் நீக்கப்பட வேண்டும்.

**விவர அட்டவணை**

**விதி2 (1)-ஐக் காண்க**

**படிவம் I**

[தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும்) விதிகளின் 18(1)-ஆம் விதி, தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டட மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) விதியின் 24(1)-ஆம் விதி; மற்றும் 1983-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும் ) விதிகளின் 4(1)-ஆம் விதியின் கீழ்]

**முதன்மை வேலை அளிப்பவரின்/வேலை அளிப்பவரின் பதிவுசான்றிதழ்***

நாள்......

**தமிழ்நாடு அரசு**

**பதிவு அலுவலர் அலுவலகம்**

1970-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) *7-ஆம் பிரிவின் (2) உட்பிரிவு/ 1996-ஆம் ஆண்டு கட்டட மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர் (வேலை வாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் 7-ஆம் பிரிவின் (3) உட்பிரிவு,(மத்தியச் சட்டம் (27/1996)*/ 1979-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும் ) சட்டத்தின் (மத்திய சட்டம் 37/1979)* 4-ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் பகுதி(a) மற்றும் ---இன் கீழ் இயற்றப்பட்ட விதியின் கீழ் பின்வரும் விவரங்களைக் கொண்ட பதிவு சான்றிதழ் இதனால் வழங்கப்படுகிறது .

1. முதன்மை வேலை வழங்குபவரின் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட பணியின் தன்மை

   நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :

2. ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரி*

3. ஒப்பந்ததாரர்களின் தொழிலாளர் அடையாள எண் / நிரந்தர கணக்கு எண் (PAN):*

4.ஒப்பந்ததாரர்களின் மின்னஞ்சல் முகவரி*

5.ஒப்பந்ததாரர்களின் கைபேசிஎண்*

6. தொழிலாளர் / கட்டட மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்* பணியமர்த்தப்பட்டுள்ள அல்லது பணியமர்த்தப்படவுள்ள ஒப்பந்ததாரரின் / வேலை அளிப்பவரின்* பணியின் தன்மை.

7.1996-ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம்27/1996) கீழ் வேலையளிப்பவரால் பணியமர்த்தப்படவேண்டிய உயரளவு எண்ணிக்கையிலான கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமான தொழிலாளர்கள்/ 1970-ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும் ) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37 /1970) கீழ் அல்லது 1979-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணிநிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 30 /1979* கீழ் யாதொரு நாளில் ஒவ்வொரு ஒப்பந்ததாரர் வாயிலாக பணியமர்த்தப்பட வேண்டிய தொழிலாளர்கள்.

பதிவுபெற்ற அதிகாரியின் கையொப்பம் முத்திரையுடன்

*பொருந்தாதவற்றை தயவுசெய்து அடித்துவிடவும்

**படிவம் II**

[தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும்) விதிகளின் விதி 21(1) மற்றும் விதி 29(2) மற்றும் 1983-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) (தமிழ்நாடு) விதிகளில்விதி 7(1), விதி 7(2) மற்றும்விதி 15 (2) இன்கீழ்]

**1970-ஆம் ஆண்டு ஒப்பந்ததொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) கீழும் 1979-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) சட்டத்தின் கீழும் (மத்தியச்சட்டம் 30 /1979)* உரிமத்திற்கான / உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்).**

**A. ஒப்பந்ததாரரின் விவரங்கள்**

1. ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி
2. ஒப்பந்ததாரரின் தொழிலாளர் அடையாள எண் / நிரந்தர கணக்கு எண்:
3. ஒப்பந்ததாரரின் மின்னஞ்சல் முகவரி
4. ஒப்பந்தாரரின் கைபேசி எண்

**B. உரிமத்திற்கான விண்ணப்பம் குறித்த நேர்வில் மட்டுமே நிரப்பப்பட வேண்டிய விவரங்கள்***

**தொழிலாளர் பணியமர்த்தப்பட வேண்டிய நிறுவனத்தின் விவரங்கள்**

(a) முதன்மை வேலைஅளிப்பவரின் பெயர் மற்றும்முகவரி

(b) இச்சட்டத்தின் கீழ் நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் எண் மற்றும் நாள்

**ஒப்பந்த தொழிலாளரின் விவரங்கள்.**

a. நிறுவனத்தில் பணியமர்த்தப்படுகிற அல்லது பணியமர்த்தப்படவிருக்கின்ற தொழிலாளரின் பணியின் தன்மை

b. நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் தொழில்வகை, வணிகம், தொழிலகம், உற்பத்தி அல்லது தொழில்வகை.

c. பணியிடத்தில் உள்ள முகவர் அல்லது ஒப்பந்ததாரின் மேலாளர் பெயர் மற்றும் முகவரி.

d. கருதப்பட்ட ஒப்பந்த பணி காலம் (தயவுசெய்து தொடங்கப்பட்ட நாள் மற்றும் நிறைவு பெறும் நாள் குறித்த விவரங்களை அளிக்கவும்)

e. யாதொரு நாளில் நிறுவனத்தில் பணியமர்த்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட உயரளவு தொழிலாளர் எண்ணிக்கை.

f. தமிழ்நாடு 2020-ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில தொழிலாளர் சட்டத்தின் கீழ் படிவங்களையும் அறிக்கைகளையும் சீரமைத்தல் விதிகளின் கீழ் படிவம் III-இல் முதன்மை வேலை அளிப்பவரின் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா?

**C. உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தின் போது மட்டுமே நிரப்பப்பட வேண்டிய விவரங்கள்.***

a. உரிமத்தின்எண்மற்றும் நாள்:

b. உரிமம் காலாவதியாகும் நாள்:

**D. உரிமக் கட்டணம் மற்றும் பிணைவைப்புத் தொகையின் விவரங்கள்**

(a) அறிவிக்கையிடப்பட்ட வங்கிக் கணக்கில் தொகை செலுத்தப்பட்டிருக்கும் நேர்வில் உரிமக் கட்டணத் தொகை, வங்கியின் பெயர், கேட்பு வரைவோலை எண் மற்றும் நாள் / வணிக நடவடிக்கை எண் மற்றும் நாள் / கருவூலத்தின் வாயிலாகத் தொகை செலுத்தப்பட்டிருக்கும் நேர்வில் செலுத்துச் சீட்டு எண், கருவூலத்தின் பெயர் மற்றும் நாள்.

(b) அறிவிக்கையிடப்பட்ட வங்கிக் கணக்கில் தொகை செலுத்தப்பட்டிருக்கும் நேர்வில் பிணைவைப்புத் தொகை, வங்கியின் பெயர், கேட்பு வரைவோலை எண் மற்றும் நாள் / வணிக நடவடிக்கை எண் மற்றும் நாள் / கருவூலத்தின் வாயிலாகத் தொகை செலுத்தப்பட்டிருக்கும் நேர்வில் செலுத்துச் சீட்டு எண், கருவூலத்தின் பெயர் மற்றும் நாள் / சிறு சேமிப்புப் படியின் எண் மற்றும் நாள்

இடம்............ விண்ணப்பதாரரின் கையொப்பம் (ஒப்பந்ததாரர்)

நாள்..............

* பொருந்தாதவற்றை அடித்து விடவும்.

---

(உரிமம் வழங்கும் அலுவலரின் அலுவலகத்தில் நிரப்பப்பட வேண்டும்)

கட்டணம் / பிணைவைப்புத் தொகைக்கான கேட்பு வரைவோலையுடன் கூடிய விண்ணப்பம் பெறப்பட்ட நாள்

உரிமம் வழங்கும் அலுவலரின் கையொப்பம்

**படிவம் III**

[தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்கலும்) விதிகளைச் சேர்ந்த 21(22) -ஆம் விதி மற்றும் தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) விதிகளைச் சேர்ந்த 7(3)-ஆம் விதியின் கீழ்]

**முதன்மை வேலையளிப்பவர் வழங்கும் சான்றிதழ்ப் படிவம்**

பின்வருமாறு சான்றளிக்கப்படுகிறது:

1. ______ விண்ணப்பதாரரை (ஒப்பந்ததாரரின் பெயர்) என்பவரை நான் ______ (நாள்) முதல் ______ (நாள்) வரையில் எனது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் _________ பணியில் பணியமர்த்தியுள்ளேன்.

2. விண்ணப்பதாரரால் எனது நிறுவனத்தில் ஒப்பந்தத் தொழிலாளர் / மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர் பணியமர்த்தப்படுவது தொடர்பான விதித்துறைகள் எனக்குப் பொருந்தக்கூடிய அளவில், 1970-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம் (மத்தியச் சட்டம் 37/1970) மற்றும் தமிழ்நாடு 1975*-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) விதிகள் / 1979-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டம் (மத்தியச் சட்டம் 30/1979) மற்றும் தமிழ்நாடு 1983*-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் *(வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) விதிகள் ஆகியவற்றின் அனைத்து விதித்துறைகளுக்கும் கட்டுப்படுவேன் என உறுதியளிக்கிறேன்.

3. மேற்சொன்ன பணியில் ஒப்பந்தத் தொழிலாளரைப் பணியமர்த்துவது, 1970-ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 10-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் அல்லது தீர்ப்பு ஒன்றில் அல்லது தீர்வு ஒன்றில் தடைசெய்யப்படவில்லை.

*இடம்: முதன்மை வேலையளிப்பவரின் கையொப்பம்

நாள்: நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி

* பொருந்தாதவற்றை அடித்து விடவும்

**படிவம் – IV**

[தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) விதிகளின் 56-ஆவது விதி, 62-ஆவதுவிதி, 69-ஆவது விதி, 70-ஆவது விதி, 72-ஆவது விதி, 73-ஆவது விதி, 74-(b) ஆவது விதி மற்றும் அட்டவணை 1-இன் கீழ்]

**பல்வேறு சாதனங்களின் தொடக்கம் மற்றும் காலமுறை சோதனை மற்றும் ஆய்வுச் சான்றிதழ்**

(தயவுசெய்து பொருத்தமான விவரங்களை நிரப்பவும்)

1. பணிநடைபெறும்இடம்

2. கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானப் பணிகளைப் பொறுத்தவரையில் பதிவு சான்றிதழ் எண் மற்றும் நாள்

| தொடர் எண் | சாதனத்தின்வகை | சான்றிதழ் எண் மற்றும் சோதனை நாள் | வேறுபடுத்தும் அடையாளங்களின் எண்ணிக்கையுடன் சூழல் மற்றும் விவரம் | சோதனை மற்றும் ஆய்வின் அளவு கோல்கள் | பயன்படுத்தப்பட்ட சோதனைப்பளு | மூன்றாவது நெடும்பத்தியில் அளவுருக்களின்படி பாதுகாப்பான பணிப்பளு (டன்கள்) | குறிப்பிட்ட விவரங்கள் | சோதனை மற்றும் ஆய்வு செய்யும் பொது சேவை அமைப்பு, சங்கம் அல்லது நிறுவனம் அல்லத சோதன செய்யும்நிறுவனத்தின்பெயர்மற்றும்முகவரி | பொது சேவை அமைப்பு, சங்கம் அல்லது நிறுவனம் அல்லது சோதனை செய்யும் நிறுவனத்தின் தகுதி வாய்ந்த நபரின் பெயர் மற்றும் பதவி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | வடஇழுவை, பளுதூக்கி மற்றும் அவற்றின் துணைக் கருவிகள் (தூக்கும் சாதனம் மற்றும் துணைக் கருவிகள்.) [தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) விதிகளின் விதி 56, விதி 74 (b) மற்றும் அட்டவணை 1] | | | | (டன்களில்) | | | | |
| 2 | பளுதூக்கி அல்லது இழுவை ஏற்றிகள் மற்றும் அவற்றின் துணைக் கருவிகள் [தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டட ம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) விதிகளின் விதி 56, விதி 74 (b)] | | | | (மீட்டர் அளவில்) | | | | |
| 3 | தளர்வான துணைக் கருவிகள் (மேலும் காலமுறை சோதனை நேர்வில் தொடக்க சோதனை மற்றும் ஆய்வு சான்றிதழ்எண் மற்றும் நாள் குறிப்பிடப்படவேண்டும்) [தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) விதிகளின் விதி70, விதி 74 (b)] | | | | (டன்களில்) | | (தயாரிப்பளர் அல்லது வழங்குப-வரின் பெயர் மற்றும் முகவரி) | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | கம்பிவடம் [தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) விதிகளின் விதி71, விதி 74 (b)] | | (தயாரிப்பாளர் அல்லது வழங்குபவரின் பெயர் மற்றும் முகவரி) | | | | (கம்பியின் தரம் மற்றும் கம்பி வடத்தை பயன்படுத்த துவதின் நோக்கம்) | | |
| 5 | தளர்வான துணைக் கருவிகளை பதனாற்றுதல் [தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு கட்டடம்மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) விதிகளின் விதி72, விதி 74 (b)] | | | | ……….. | ………….. | (பதனாற்று தலுக்குப் பின்னர் ஆய்வில் கண்டறி யப்பட்ட குறைகள்) | | |
